# காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு நிறுவன இயக்குநருக்கு விருது

**புதுச்சேரி, ஆக. 27–**

புதுச்சேரி, காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சசி காந்த தாஸ்க்கு 'சிறப்பு அங்கீகார விருது' வழங்கப்பட்டது.

சென்னையில் 'எஜி இன்ஸ்பையர் 26' என்ற தேசிய அளவிலான கல்வி நிகழ்ச்சியில் 'சிறப்பு அங்கீகார விருது – பார்வையாளர்கள் தேர்வு' நடந்தது.

எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த விழாவில், புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சசி காந்ததாசிற்கு 'ஒரு செடி – ஒரு வாக்குறுதி' என்ற தலைப்பில் வழங்கிய விளக்கவுரைக்காக 'சிறப்பு அங்கீகார விருது' வழங்கப்பட்டது.

அதில், மரக்கன்றுகள் நடுவதை ஒரு வழக்கமான சுற்றுச்சூழல் நடவடிக்கையாக மட்டுமே கருதாமல், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடமும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான தனிப்பட்ட உறுதிப்பாட்டையும் நீடித்த பொறுப்புணர்வையும் உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையை டாக்டர் சசி காந்த் தாஸ் முன்வைத்தார்.

இந்த விளக்கவுரை தனித்துவமான கல்வித் தலைமையியல், நிறுவனப் புதுமை மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட மாற்றத்திற்கான அணுகுமுறையை வெளிப்படுத்தியது.



புதுச்சேரி, காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சசிகாந்ததாசிற்கு 'சிறப்பு அங்கீகார விருது' வழங்கப்பட்டது.

பார்வையாளர்களின் தேர்வின் அடிப்படையில் நாடு முழுதும் இருந்து பங்கேற்ற 41 பேரில் சசி காந்த தாஸ்க்கு விருது வழங்கப்பட்டது. புதுச்சேரி அரசின் 2024ம் ஆண்டிற்கான சிறந்த பொது நிர்வாகத்திற்கான முதல்வர் விருதையும் பெற்றுள்ளார்.

Dinamalar | 27/08/2026 | page no - 2